நேரடியாக மனுச் செய்தவர்களுக்கும், தலத் தணிக்கை செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அதன்மூலமாக அட்டைகள் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன். (குறுக்கீடு) என்ன விஷயம்? இது தொடர்பானதா? இந்த subject தானா? (குறுக்கீடு) சரி.

(ஆ) கடலூர் மாவட்டம், இடி தாக்கி உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு நிவாரணம் வழங்குதல் மற்றும் இடிதாங்கிகள் அமைத்தல்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில நாட்களில், கடலூர் மாவட்டத்தில் மட்டும் இடி தாக்கி ஐந்து பேருக்கு மேல் இறந்திருக்கிறார்கள். எனக்குக் கிடைத்த ஒரு தகவல், அமெரிக்கா, ஜப்பான், இங்கிலாந்து போன்ற மேலை நாடுகளில், இடியே விழாத அளவிற்கு, அந்த நாட்டினுடைய அரசாங்கம், இடி தாங்குகின்ற கருவிகளைப் பல்வேறு பகுதிகளில் பொருத்தி, அப்படி இடி ஏற்படுகின்றபோது, இடியினுடைய வேகத்தை, அதனுடைய பாதிப்பை அவை உள்வாங்கிக் கொண்டு, அந்த மக்களுக்கு உயிர்ச் சேதங்கள் இல்லாத ஒரு நிலை அங்கெல்லாம் இருக்கிறது. ஆனால், நம்முடைய தமிழகத்தில், குறிப்பாக மழைக் காலங்களில், பல்வேறு மாவட்டங்களில் இடி ஏற்படுகின்றபோது, கூலிகள், விவசாயிகள், ஏழை மக்கள், தங்களின் வயலைச் சார்ந்த வேலைகளைச் செய்கின்றபோதும், சைக்கிளில் சென்றுகொண்டிருக்கும்போதும், மரங்களின்கீழ் ஒதுங்குகின்றபோதும் இடி விழுந்து, மிகப் பெரிய உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. ஆதலால், மாண்புமிகு நம்முடைய தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புவது, இதுபோன்று இடிச் சம்பவங்கள் ஏற்படுகின்றபோது, அந்த விலை மதிக்க முடியாத உயிர்களைப் பாதுகாக்கின்ற வகையில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், மேலை நாடுகளில் இருபபதுபோன்ற அனைத்துப் பகுதிகளுக்குமான அந்த இடிதாங்கிகளை நிறுவி, உயிர்ச் சேதங்களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். ஒரு வாரத்தில் மட்டும் கடலூர் மாவட்டத்தில் ஐந்து உயிர்கள் பலியாகியிருக்கின்றன. உயிரிழந்த அந்தக் ஐந்து குடும்பங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நிவாரண நிதி வழங்கப்படுமா என்பதையும் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடி விழுந்ததன் காரணமாக உயிரிழந்த மக்களுடைய குடும்பங்களுக்குக் குடும்ப நிதி வழங்கப்படுமா என்று கேட்டிருக்கின்றார். அது பற்றிப் பரிசீலித்து, வழங்குவதா, இல்லையா என்பதை அல்ல, எவ்வளவு வழங்குவது என்பதைப் பரிசீலித்து, ஆவன செய்யப்படும். இடி தாங்குவதற்கு என்ன செய்யப் போகின்றீர்கள் என்று கேட்டார். நானே ஒரு இடிதாங்கி, என்ன செய்வது? *(மேசையைத் தட்டும் ஒலி)*

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம். *(குறுக்கீடு)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* சுதர்சனம். *(குறுக்கீடு)* உட்காருங்கள். *(குறுக்கீடு)*

3. பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் கொட்டக்காச்சியேந்தல் தனித் தொகுதிகளாகவே தொடர முடிவு—பாராட்டும், நன்றியும்

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொன்னவுடனே கேட்க வேண்டுமென்று அவசியமில்லை. முதலில் உட்காருங்கள். *(குறுக்கீடு)* பொறுங்கள். *(குறுக்கீடு)*, நீங்கள் கட்டாயப்படுத்தி அனுமதி வாங்க முடியாது. முதலில் உட்காருங்கள். *(குறுக்கீடு)* முடியாது. சொல்லுங்கள், திரு. சுதர்சனம். *(குறுக்கீடு)* நான் கொடுக்கிற நேரம்தான் கொடுப்பேனே தவிர, இப்படியெல்லாம் கட்டாயப்படுத்தினாலெல்லாம் என்னிடம் நடக்காது. *(குறுக்கீடு)*. திரு. சுதர்சனம், சொல்லுங்கள். *(குறுக்கீடு)*

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்னாலே, இந்த அவையிலே, ஆதி திராவிடர் நலத் துறை மானியக் கோரிக்கை இங்கே நடைபெற்றது. அப்போது